


# காரைக்குடி நியூஸ்




KARAIKUDI NEWS | 16-JUNE-2026 | செவ்வாய்க்கிழமை | E-PAPER | 9 Pages

# சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா

# 15 நிமிடங்களில் 6,600 மரக்கன்றுகள் நட்டு இந்திய சாதனை




சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் 15 நிமிடங்களில் 6,600 மரக்கன்றுகள் நட்டு இந்திய சாதனை படைத்துள்ளனர்.

காரைக்குடி அருகே விசாலையன் கோட்டையில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் 6ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழாவும், இந்தியன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் பதிவு பெற்ற 15 நிமிடங்களில் 6,600 மரக்கன்றுகள் நடும் மாபெரும் பசுமைப் புரட்சி நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் முனைவர் சேது குமணன் தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் வி. பேபி ராணி வரவேற்புரை வழங்கினார். விழாவின் சிறப்பு விருந்தினராக மைசூர் அரச குடும்பத்தைச் சேர்ந்த மகாராஜா ஸ்ரீ யதுவீர் கிருஷ்ணதத்த சாமராஜ உடையார் ( நாடாளுமன்ற உறுப்பினர் மைசூர் குடகு தொகுதி) கலந்து கொண்டு பட்டமளிப்பு உரையாற்றினார். மாணவர்கள் தங்களது அறிவு திறன் மற்றும் சமூகப் பொறுப்புணர்வை ஒருங்கிணைத்து நாட்டின் முன்னேற்றத்திற்கும், நிலையான வளர்ச்சிக்கும் பங்களிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். மேலும், மியான்மர் குடியரசின் கௌரவத்தலைவர் பேராசிரியர் ஜெ. ரங்கநாதன், மருத்துவத் தரப்படுத்தல் துணைக்குழு மற்றும் யுனானி மருத்துவ ஆராய்ச்சிக்கான துணைக் குழுத் தலைவர் முனைவர் இராஜேந்திரன் ஆனைமுத்து, டிஜி அக்ரிகான் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் நிர்வாக அலுவலர் செந்தில் குமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்தினர். இதனைத் தொடர்ந்து மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. கல்வி மற்றும் இணைப்பாடச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்குத் தங்கப் பதக்கங்கள், அறக்கட்டளை விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது மற்றும் சிறந்து வெளியேறும் மாணவர் விருது செ. அழகுமீனா மற்றும் ரா. சுபாஷினி ஆகியோருக்கு வழங்கப்பட்டது. கல்வி மற்றும் இணைப்பாடச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கியதற்காக சேது பாஸ்கரன் சிறப்புச் சான்றிதழ் விருது எஸ்.ஜரின் ஜஸ்டினாவிற்கு வழங்கப்பட்டது.

மேலும், வேளாண் மற்றும் சமூகவளர்ச்சிக்காகப்

2ம் பக்கம் பார்க்க

# சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா

# 15 நிமிடங்களில் 6,600 மரக்கன்றுகள் நட்டு இந்திய சாதனை





1-ம் பக்கம் தொடர்ச்சி

பெரும் பங்காற்றிய டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், டாக்டர் பி. வசந்தராஜ் டேவிட், டாக்டர் சி.வி. சுப்பிரமணியன், டாக்டர் ரத்தன்லால், டாக்டர் கிரிகோர் மெண்டல், டாக்டர் ஜி.எஸ். ரந்தாவா மற்றும் டாக்டர் அமர்த்யா சென் ஆகியோரின் பெயர்களில் நிறுவப்பட்ட விருதுகளும், சேது ஐராணி அம்மாள் பெயர்களில் சிறப்புச் சான்றிதழ்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு முன்னர் மாலை 4 மணியளவில் நடைபெற்ற இந்தியன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் பதிவு முயற்சியின் ஒரு பகுதியாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை மேம்பாட்டை வலியுறுத்தும் வகையில், கல்லூரி பண்ணை வளாகத்தில் 15 நிமிடங்களில் 6,600 மரக்கன்றுகள் நடும் மாபெரும் நிகழ்வு நடைபெற்றது. மைசூர் மகாராஜா ஸ்ரீ யதுவீர் கிருஷ்ணதத்த சாமராஜ உடையார் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை (CISF), ஸ்ரீ ராஜா ராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அமராவதி புதூர், ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரி அமராவதி புதூர், சேது ஐராணி மெட்ரிகுலேஷன் பள்ளி கண்டரமாணிக்கம் சேது பாஸ்கரா தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI) கண்டரமாணிக்கம், எம்.ஏ.பி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கண்டரமாணிக்கம் மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளி, விசாலையன்கோட்டை ஆகிய கல்வி மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் தன்னார்வ லர்கள் ஆர்வமுடன் பங்கேற்று மரக்கன்றுகளை நட்டனர்.

இந்நிகழ்வை இந்தியன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்பதிவுமேலாளர்முனைவர் யு. இராஜேஷ் மற்றும் அற்புதமான உலகளாவிய சாதனையாளர்கள் கழகத்தின் பொதுமேலாளர் முனைவர் பா.பால சுப்பிரமணியன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். 15 நிமிடங்களில் 6,600 மரக்கன்றுகள் நடப்பட்ட சாதனையை உறுதிப்படுத்தி, இந்தியன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் சார்பில் உலக சாதனைச் சான்றிதழ் மற்றும் விருதுகளை வழங்கினர்.

மேலும், கல்வி, சமூகப் பொறுப்பு மற்றும் சுற்றுச்சூ ழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருவதற்காக, இந்தியன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் வழங்கும் மாஸ்டர் மைண்ட் விருது" சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் முனைவர் சேது குமணனுக்கு வழங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பசுமை வள மேம்பாடு மற்றும் கால நிலைமாற்றம்குறித்தவிழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவதே இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். இந்நிகழ்வுகளில் நிர்வாகிகள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# திருப்பத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் முப்பெரும் விழா

திருப்பத்தூர்அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் முப்பெரும் விழா

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் முப்பெரும் விழா நடைபெற்றது.

போதை ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மன்ற துவக்க விழா அரசு பொதுத் தேர்வில் நூறுசதவிகிதம் தேர்ச்சி சதவிகிதத்தை உயர்த்திக்காட்டிய ஆசிரியப் பெருமக்களுக்குப் பாராட்டு விழா, உலக முதியோர் வன்கொடுமை எதிர்ப்பு உறுதிமொழி என முப்பெரும் விழாவாக பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவிற்கு பள்ளித் தலைமை ஆசிரியர் பாரதிதாசன் தலைமை வகித்தார். ஆசிரியர் ரவீந்திரன், மாவட்ட பசுமைத் தோழர் சர்மிளா, பள்ளி மேலாண்மைக்குழுத்துணைத் தலைவர் சரவணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவின் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திருப்பத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் சீனிவாசசேதுபதி தேசியக் கொடியை ஏற்றி வைத்து உலக முதியோர் வன்கொடுமை எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டு ஆசிரியர்களுக்கு தேர்ச்சி சதவிகிதம் உயர்த்திக்காட்டியதற்கு சிறப்பு பரிசு







வழங்கி கௌரவித்தார். பின்னர் ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கு கொண்ட போதை ஒழிப்பு சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வுபேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். தேசிய மாணவர் படையினர் நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் உள்ளிட்டோர் இப்பேரணியில் பங்கு கொண்டனர். இந்நிகழ்ச்சியில் சட்ட ஆலோசகர் வழக்குரைஞர் சண்முகம்,முன்னாள்மாணவர் எம்.தினேஷ்குமார், ஆசிரியர்கள் ரேணுகா, பிரியா, ஆறுமுகம், தேவி, பரமேஸ்வரி, முத்துக்கனி, பாகம்பிரியாள், முத்துப்பாண்டி, ஆண்டனி, வெங்கட்ராகவன், ஜாபர்நிஷா, ஜெயமேரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக அனைவரையும் ஆசிரியர் பாண்டியன் வரவேற்றார். விழா முடிவில் ஆசிரியர் செந்தில்குமார் நன்றி கூறினார்.



# காரைக்குடியில் துப்புரவு பணியாளருக்கு பாலியல் தொந்தரவு








காரைக்குடியில் துப்புரவு பணியாளருக்கு பாலியல் தொந்தரவு; நடவடிக்கை கோரி காவல் நிலையத்தில் புகார்

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சியில் பணி புரியும் 20 வயது பெண்துப்புரவுபணியாளருக்கு பாலியல் தொந்தரவு அளித்ததாக 54 வயது நபர் மீது காரைக்குடி வடக்குகாவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் குப்பை சேகரிக்கச் சென்ற போது அந்த நபர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாகவும், பின்னர் மீண்டும் தொந்தரவு செய்ததாகவும் பெண்குற்றம்சாட்டியுள்ளார்.

இதையடுத்து சக துப்புரவு பணியாளர்கள் பணியை நிறுத்திவிட்டு காவல் நிலையம் சென்று சம்பந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினர்.

இந்த சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

WHATSAPP

மூலம் காரைக்குடி நியூஸ்
WHATSAPP
சேனலை பின்பற்ற
SCAN செய்யவும்

# தேவகோட்டையில் தீ விபத்து









தொழிலாளர்கள் தங்கியிருந்த கீற்று கொட்டகையில் தீ விபத்து; இருசக்கர வாகனமும் சேதம்

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை பழைய பேருந்து நிலைய பகுதியில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், அங்கு பணியாற்றும் தொழிலாளர்கள் தங்குவதற்காக தற்காலிககீற்றுகொட்டகை அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நள்ளிரவு சுமார் 1 மணி அளவில் திடீரென கீற்று கொட்டகையில் தீப்பிடித்து எரிந்ததால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தேவகோட்டை தீயணைப்பு நிலைய பொறுப்பு அலுவலர் ஆறுமுகம் தலைமையிலான தீயணைப்பு மற்றும்மீட்புப்பணித் துறையினர் தீயை போராடி அணைத்தனர்.இந்ததீவிபத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்தகீற்றுகொட்டகை முற்றிலும் எரிந்து சேதமடைந்ததுடன், அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனமும் தீயில் கருகி சேதமடைந்தது. தீயணைப்புத் துறையினரின் துரித நடவடிக்கையால் அருகில் உள்ள வணிகக் கட்டடங்களுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் குறித்து தேவகோட்டை நகர் போலீசார் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.



# மடப்புரத்தில் தனியார் மனமகிழ் மன்றத்தை அகற்றக்கோரி சாலை மறியல்

மடப்புரத்தில் தனியார் மனமகிழ் மன்றத்தை அகற்றக்கோரி சாலை மறியல்; 15 நாட்களில் நடவடிக்கை என போலீஸ் உறுதி

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரத்தில் செயல்பட்டு வரும் தனியார் மனமகிழ் மன்றத்தை அகற்றக்கோரி 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திடீர் சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவில், பள்ளி அருகே செயல்படும் இந்தமன்றத்தால்மாணவர்கள், பெண்கள் மற்றும் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுவதாக குற்றம்சாட்டிய மக்கள், பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவித்தனர்.

தகவலறிந்து வந்த டிஎஸ்பி லோகநாதன் தலைமையிலான காவல்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தி, 15 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி யளித்ததைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.







SRI RAGHAVENDRA
MATRICULATION HIGHER SECONDARY SCHOOL
RUN BY: EXALT EDUCATIONAL TRUST
2026 -2027
ADMISSION IS GOING ON
CONTACT NUMBERS:
04565-232445, 7708762557
GANDHIPURAM 1ST STREET,
V.O.C.ROAD, KARAIKUDI - 630001

# உள்ளரங்கிலும், மேட்டிலும் கபடி பயிற்சி அளிக்க வசதி ஏற்படுத்த வேண்டும்

# இந்திய கபடி அணியின் பயிற்சியாளர் கவிதா செல்வராஜ் கோரிக்கை

உள்ளரங்கிலும், மேட்டிலும் கபடி பயிற்சி அளிக்க வசதி ஏற்படுத்த வேண்டும் இந்திய கபடி அணியின் பயிற்சியாளர் கவிதா செல்வராஜ் கோரிக்கைஇந்திய மகளிர் கபடி அணியில் விளையாடி தங்கப்பதக்கம் வென்றவரும், தற்போதைய கபடி பயிற்சியாளருமான கவிதா செல்வராஜ், சிவகங்கை திறந்தவெளி விளையாட்டு அரங்கில் பயிற்சி பெறும் கபடி வீரர், வீராங்கனைகளுக்கு சிறப்பு பயிற்சி வழங்கினார்.

தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற இந்த பயிற்சியில், கபடி விளையாட்டில் ஈடுபட்டு வரும் வீரர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். விளையாட்டில் உள்ள குறைகளை கண்டறிந்து அவற்றை சரிசெய்வதுடன், புதிய யுத்திகள் மற்றும் நுட்பங்களையும் கவிதா செல்வராஜ் கற்றுக் கொடுத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் தாமும் ஒரு விளையாட்டு வீரர் என்பதால், விளையாட்டு வீரர்களின் தேவைகளை நன்கு அறிந்து செயல்படுவார் என்ற நம்பிக்கை இருப்பதாக கூறினார். மேலும், தமிழகத்தின் பாரம்பரிய விளையா ட்டான கபடியை உள்ளரங்கிலும், மேட்டிலும் விளையாடுவதன் மூலம் வீரர்கள் தங்களது திறமைகளை மேலும் மேம்படுத்திக் கொள்ள முடியும் என தெரிவித்த அவர், அதற்கான பயிற்சி மற்றும் கட்டமைப்பு வசதிகளை தமிழக அரசு ஏற்படுத்தித்தர வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.











# சிவகங்கையில் காலிக்குடங்களுடன் ஆட்சியர் அலுவலகம் வந்த பெண்கள்

குடிநீர் கேட்டு காலிக் குடங்களுடன் ஆட்சியர் அலுவலகம் வந்த பெண்கள்

சிவகங்கை மாவட்டம்காளையார்கோவில் அருகே புல்லுக் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த பெண்கள், குடிநீர் தட்டுப்பாட்டை கண்டித்து காலிக்குடங்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர். காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நீரேற்று நிலையம் மற்றும் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி தொழில்நுட்பக் கோளாறால் செயல்படாததால், கடந்த 3 ஆண்டுகளாக 200 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீர் பற்றாக்குறையால் அவதிப்பட்டு வருகின்றன.

குடிநீருக்காக 10 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், ஒரு குடம் தண்ணீரை ரூ.12 கொடுத்துவாங்கிபயன்படுத்தி வருவதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

உடனடியாக கோளாறுகளை சரிசெய்து சீரான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.







SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI

79th YEAR ANNIVERSARY

ஸ்ரீ விசாலம் சிட் :.பண்ட் லிமிடெட்

06-01-1947 முதல் மக்கள் சேவையில்,
தென்னிந்தியாவின் நம்பகமான மற்றும்
முதன்மையான சீட்டு நிறுவனம்

நம்பிக்கை, நாணயம், நேர்மை,
நிலையான தன்மையுடன் மக்கள் சேவையில்

கிளை : V.O.C ரோடு, காரைக்குடி - 630001
04565-238268, 7397720167

# தேவகோட்டை அருகே கண்டதேவி குங்கும காளியம்மன் தேரோட்டம்

தேவகோட்டை அருகேகண்டதேவி குங்கும காளியம் மன் தேரோட்டம்சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே கண்ட தேவி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ குங்கும காளியம் மன் ஆலயத்தில் வைகாசி உற்சவ திருவிழா ஜூன் ஏழாம் தேதி காப்பு கட்டுடன் விழா தொடங்கப்பட்டு தினந்தோறும் மாலையில் குதிரை, சிம்மம் போன்ற பல் வேறு வாகனங்களில் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் திரு வீதி புறப்பாடு நடை பெற்றது

மாலை அம்மன் தேர் எழுந்தருள செய்யப்பட்டு சிறப்பு தீபாராதனை காண்பித்து பக்தர்கள் மற்றும் பொது மக்கள்தேர்வடத்தை பிடித்து கோவிலை சுற்றி இழுத்து கிளம்பி இடத்திற்கு வந்தடைந்தது.

தேவகோட்டை டிஎஸ்பி கண்ணன் தலைமையில் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்



